பக்கங்கள் : 12

Viber : 076 636 3378

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23

ஒலி 330 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 28 திங்கட்கிழமை (14.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# மாவீரர் நாளன்று சுடர் ஏற்ற முடியாது

## துயிலும் இல்லத்தை துப்புரவு செய்தவர்களை எச்சரித்த இராணுவத்தினர்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாவீரர் நாளுக்கான ஏற்பாட்டில் ஈடுபட்டிருந்தவர்களை இராணுவத்தினர் தமது முகாமுக்கு அழைத்து விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.**

கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் விஜிந்தன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான அமலன், ஜெகன் ஆகியோரும் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இணைந்து முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் துப்புரவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த நேரத்தில் அப்பகுதிக்கு வருகைதந்த இராணுவத்தினர் விசார 11

# தீயில் எரிந்த மூதாட்டி மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயம் மற்றும் சுடு தண்ணீர் ஊற்றுண்டு எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட மூதாட்டி ஒருவர் சிகிச்சை பலனின்றி ஒரு மாதங்களின் பின் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கள்ளித்தெரு, காரைநகரைச் சேர்ந்த இரத்தினம் 11

# போதைப் பாவனைக்கு எதிராக கடும் சட்டம்

## ஆராய்கிறது அரசு

(கொழும்பு)

இளைஞர்களின் வாழ்க்கையை சீரழிக்கும் போதைப்பொருள் கடத்தலில் இருந்து சமூகத்தை விடுவிக்க புதிய சட்டங்களை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, சமூகப் பேரிடராக மாறியுள்ள ஐஸ் போதைப்பொருள் 5 கிராமை ஒருவர் வைத்திருந் 11

# மன்னாரில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(மன்னார்)


மன்னாரில் பட்டா ரக வாகனம் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் நேற்று காலை 9 மணியளவில் இசைமாலைதாழ்வு பகுதியிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மன்னார் நோக்கி சென்றுகொண்டிருந்த குறித்த பட்டா ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகிய 11

## 2023ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்

# பாராளுமன்றில் இன்று சமர்ப்பிப்பு



(கொழும்பு)

நிலையான மற்றும் நீண்டகால பொருளாதார வளர்ச்சியை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.அளவெட்டியில்

# ஹெரோயினுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். அளவெட்டி நரியிட்டான் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட பொலிஸ் ரோந்து நடவடிக்கையின்போதே 11

## மின்கட்டணம் செலுத்தாததால்

# இருளில் மூழ்கியது ஸ்ரீதர் தியேட்டர்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 11



# தமிழர்களின் தீர்வு தொடர்பில் கொழும்பில் நாளை கூட்டம்

## தமிழ்க் கட்சிகளை அழைக்கிறார் சுமந்திரன்

(கொழும்பு)

எமது மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்காக கட்சி வேறுபாடுகளை புறம் வைத்து அனைவரையும் உரையாடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

நாளை 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு சம்பந்தனின் கொழும்பிலுள்ள இல்லத்தில் ஒன்றுகூடு 11

# பாடசாலையில் மாணவர்களின் வருகை வீழ்ச்சி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மாணவர்களின் பாடசாலை வருகை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அதிர்ச்சியளிக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வங்குரோத்தான நாட்டில் அமைச்சுப் பதவியா?

## எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி



(கொழும்பு)

மனசாட்சியுள்ள எவருக்கும் தற்போதைக்கு அமைச்சுப் பதவியொன்றை பெற்றுக் கொள்ள முடியாது எனவும், வங்குரோத்தடைந்துள்ள நாட்டில் எப்படி அமைச்சுப் பதவிகளையும், சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் பெறுவது என்பது ஆச்சரியமளிப்பதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் குளியாப்பிட்டிய தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் குழந்தைகள் சரியான ஊட்டச்சத்தின்றி மயக்கமடைந்து விழும் நாட்டில், இருண்ட எதிர்காலத்தால் அப்பாவி இளம் தலைமுறை நாட்டைவிட்டு வெளியேறும் நேரத்தில், ஒட்டுமொத்த மக்களும் வறுமையின் பிடியில் வாடும் நேரத்தில், உணர்வுள்ள, புரிதலுள்ள எவரும் அமைச்சுப் பதவிகளுக்கு, சலுகை வரப்பிரசாதங்களுக்கு உட்பட முடியாது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாடு வங்குரோத்து நிலையில் இருக்கும் போது அமைச்சுப் பதவிகளை 15 ஆகவும் பிரதி அமைச்சுப் பதவிகளை 15 ஆகவும் மட்டுப்படுத்தி முன்னுதாரணமாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

என்றாலும், மொட்டுவின் பலத்துடன் ஜனாதிபதி பதவிக்கு வந்த ஜனாதிபதியால் அவ்வாறு செயற்பட முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (4-7)

# முட்டைக்கு பாரிய தட்டுப்பாடு மூடப்படும் நிலையில் சிற்றுண்டிச்சாலைகள்

முட்டைத் தட்டுப்பாட்டால் எதிர்வரும் மூன்று நாட்களில் நாட்டிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளை மூடக்கூடிய நிலைமை உருவாகியுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தவிடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத்,

சந்தையில் ஏற்பட்டுள்ள முட்டை தட்டுப்பாட்டை தீர்ப்பதற்கு அரசாங்கம் மற்றும் உற்பத்தியாளர்கள் உரிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக நுகர்வோர் அதிகாரசபை சுற்றிவளைப்புக்களை முன்னெடுத்து பாரிய தொகை அபராதங்களை விதிக்கிறது. இது சிறந்தவொரு விடயமாகும்.

இந்தநிலையில் தற்போது ஏற்பட்டுள்ள முட்டைத் தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு உற்பத்தியாளர்கள், அது சார்ந்த சங்கத்தினர் மற்றும் அரசாங்க பிரதிநிதிகள் ஒன்றாக கலந்துரையாடி உடனடியாக உரிய தீர்வை வழங்க வேண்டும் என சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.(4-7)


## துயர் பகிர்கின்றோம்



தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் எம்மோடு
சம காலத்தில் பணியாற்றி ஓய்வு காலத்தில்
லண்டனில் வசித்து வந்த ஆசிரியை

திருமதி **தோத்திரமலர் சச்சிதானந்தம்**

அவர்கள் சிங்கப்பூரில் மறைந்த
செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
தொலைதூரத்தில் இருந்தாலும்
அவ்வப்போது எம்மைத் தொடர்பு
கொண்டு நலம் விசாரிக்கும்
அன்புள்ளம் கொண்ட ஆசிரியையின்
மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

(C-5261)

சம காலத்தில் அவருடன் பணியாற்றிய
யா/ யூனியன் கல்லூரி முன்னாள் ஆசிரியர்கள்



## பாடசாலையில் கல்வி பயிலும் மாணவனுக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் வீட்டில் Room வாடகைக்கு உண்டு

வீட்டு குறிப்பு : - சூராவத்தை றோட் ரட்ணா பல்பொருள் வாணிபம்
சுன்னாகம் கிழக்கு ஊரிசாட்டி திருப்பதியுறை சிவபூதராஜர்
கோயிலடி துரை பேக்ஹவுஸ் பேக்கரி தபால் பெட்டி பெரிய
அரசமர ஒழுங்கையில் இடது பக்க மூன்றாவது வீட்டில் நிரந்தரமாக
தங்கி நின்று கல்விகற்க வசதியான வீடு சகல வசதியும் உண்டு.
பாடசாலை விடுதியில் தங்கும் மாணவனுக்கும் Room உண்டு.
வயதில்லை, சமயம், சாதி வேறுபாடு இல்லை. சகலரும் வரலாம்.

**076 042 5320, 077 470 0767**

தேவவாசம்,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.

(13345)


# படகு விபத்தில் மாயமான இரு சிறுமிகளும் சடலமாக மீட்பு

சூரியவெவ - மகாவெலிகடார குளத்தில் படகு கவிழ்ந்ததில் மூழ்கி காணாமற்போயிருந்த 2 சிறுமிகளும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமிகளின் சடலங்கள் நேற்று காலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருணாகல் - ரிதிகம, பிஹிம்பிய பகுதியைச் சேர்ந்த 16 மற்றும் 18 வயதான ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 சிறுமிகளே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

படகு கவிழ்ந்ததில் காணாமல்போன 10 வயது சிறுமியின் சடலம் நேற்று முன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டது.

விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் மீன்பிடி படகில் 8 மாத குழந்தை உட்பட 8 பேர் பயணித்துள்ளனர்.

சூரியவெவ பகுதியிலுள்ள உறவினர் வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக வந்த சந்தர்பத்திலேயே இந்த அனர்த்தத்தை எதிர்நோக்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.(4-7)

# முட்டைகளை பதுக்கினால் சட்ட நடவடிக்கை

## வர்த்தக அமைச்சர்

முட்டைகளை பதுக்கி வைக்கும் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணாண்டோ எச்சரித்துள்ளார்.

சந்தையில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை எனவும், எனினும் சிலர் முட்டைக்கு தட்டுப்பாடு இருப்பதாக சித்தரிக்க முயல்வதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட முட்டை விலையை மேலும் அதிகரிக்க ஒருபோதும் அனுமதி வழங்கப்போவதில்லை என்றும் வர்த்தக அமைச்சர் கூறியுள்ளார்.

உற்பத்தி செலவு கணிசமாக உயர்ந்துள்ளதால், அரசாங்கம் அறிவித்துள்ள அதிகபட்ச சில்லறை விலைக்கு முட்டையை விற்க முடியாது என முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# அரச சொத்தை விற்க புதிய சட்டம்

(கொழும்பு)

அரச காணிகள் உள்ளிட்ட சொத்துக்கள் வெளிநாடுகளுக்கு வழங்குவது தொடர்பில் புதிய சட்டம் உருவாக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றின் அனுமதியின்றி அரசாங்க சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்தல் அல்லது வேறு வழியில் வழங்குவதை தடை செய்தல் தொடர்பிலான புதிய சட்டமொன்று உருவாக்கப்பட உள்ளது.

துறைமுகம், விமான நிலையம் அல்லது பாதுகாப்பு விவகாரங்களுடன் தொடர்புடைய இடங்கள் என்பனவற்றை விற்பனை செய்தல் அல்லது குத்தகைக்கு விடுதல் போன்றவற்றுக்கு பாராளுமன்றின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (4,7)




## ஸ்ரீ அம்மா பகவானின் நன்றிகள் தினம் (நன்றி நவிலும் நாள்)

**இடம் : நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம் நல்லூர்**
**காலம் : 14.11.2022**
**மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை**

மக்களைத் துன்பத்தில் இருந்து விடுவித்து ஆனந்தமான வாழ்க்கையை வாழ அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ கல்கி பகவதி பகவான் ஸ்ரீமத் பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் கொடுத்த வாக்கை நிரூபிக்கும் வகையில் ஸ்ரீமன் நாராயணன் மனிதராக ஸ்ரீ கல்கி பகவதி பகவான் சமேதராக கலியுகத்தில் அவதரித்துள்ளார்.

ஸ்ரீ பகவதி பகவான் தங்களை நம்பி வரும் பக்தர்கள் அனைவருக்கும் அருளும் அற்புதமும் அனுக்கிரகமும் செய்கின்றனர்.

நம்மை படைத்த கடவுளுக்கு பிறவியைக் கொடுத்த தாய் தந்தை, சிநேகிதர்கள், கணவன் மனைவி உறவுகள் மற்றும் எல்லா ஜீவராசிகளுக்கும் நம் இதயத்தில் இருந்து அன்பை(நன்றி) வெளிப்படுத்த வேண்டும்.

பகவத் தர்மத்தில் NOV 14 நன்றிகள் நாளாகக் கொண்டாடுகின்றோம்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**அம்மா பகவான் அமைப்பு**
**யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ்பாணக் கிளை ஏற்பாட்டில், பேராசிரியர் திருமதி. சுபதினி ரமேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி. பேரின்பநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (படங்கள்- சிவசாந்தன்)

# தனிமையில் இருந்த மூதாட்டியை வாளால் அச்சுறுத்திய நபர்

(அராலி)

யாழ்ப்பாணம் - மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டைக்காடு முள்ளியான் பகுதியில் வாளால் வீட்டை சேதப்படுத்தி அச்சுறுத்திய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் வீடு ஒன்றினை முற்றுகையிட்டு அடாவடி செய்த நபர் வீட்டின் கதவுகளை வாளால் தாக்கியும் கற்களால் எறிந்தும் சேதப்படுத்தியுள்ளார். குறித்த வீட்டில் தனிமையில் இருந்த வயோதிப தாய் ஒருவர் மிகுந்த அச்சம் கொண்டு அயலவர்களை உதவிக்கு அழைத்துள்ளார்.

நேற்றைய தினம் இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-33-104)

அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் பற்சிகிச்சை நிலையம் மேம்படுத்தப்பட்டு, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனால் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
(படம்-கஜிந்தன்,சிவசாந்தன்)



## மர்மப்பொருள் வெடித்ததில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோப்பாய், கைதடி வீதியில் நேற்று காலை மர்மப்பொருளொன்று வெடித்ததில் இருவர் காயமடைந்தனர்.

தனியார் தொண்டு நிறுவனமொன்று மரநடுகைக்காக சிரமதானப் பணியில் ஈடுபடும்போது மர்மப்பொருளொன்று வெடித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வெடிப்பு சம்பவத்தின் போது தனியார் தொண்டு நிறுவன பணியாளர்கள் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(நி-33-104)

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு கொடிகாமம் மற்றும் மிருசுவில் படை முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினரால் கடந்த திங்கட்கிழமை பொதுமக்களுக்கு சிற்றுண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
(படம்- சுபேசன்)




## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

**01.01.2023 தொடக்கம் 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு இறைச்சிக்கடைகள் மற்றும் முள்ளிப்பற்று பழைய உப அலுவலகத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2023**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 14.11.2022 தொடக்கம் 28.11.2022 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 28.11.2022 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 28.11.2022 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்
இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 2,125,200.00 | 42,500.00 | 2,000.00 |
| 02 | கோழி இறைச்சிக்கடை | 540,126.00 | 10,000.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 75,350.00 | 5,000.00 | 2,000.00 |
| 04 | கருவாட்டுக்கடை | 12,650.00 | 5,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 05 | கோழி இறைச்சிக்கடை | 68,200.00 | 5,000.00 | 2,000.00 |
| 06 | பழையமுள்ளிப்பற்று உப அலுவலகம் | 90,000.00 | 5,000.00 | 2,000.00 |

**நியந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 28.11.2022 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்வி சித்திதாரராக தெரிவுசெய்யப்படுவோர் கேள்வித் தொகையில்1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ள வேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
09. மாட்டிறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்விபத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.** (c-5260) 14.11.2022


## யாழ்.நீரிழிவு கழகத்தின்
# இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகத்தினால் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை ஆஸ்பத்திரி வீதியில் (முன்னர் கொமர்சியல் வங்கி இயங்கிய இடத்தில்) நடைபெறவுள்ளது.

குறித்த இலவச நீரிழிவு பரிசோதனை முகாமில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை, உடல் திணிவு சுட்டி பரிசோதனை என்பவற்றுடன் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வாசிப்பு கண்ணாடி இலவசமாக வழங்கப்படும் என யாழ். நீரிழிவுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (நி)

## குருநகர் புனித யாகப்பர் ஆலய குண்டுத் தாக்குதல் நினைவேந்தல் நிகழ்வு



(அராலி)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் விமானக்குண்டு தாக்குதலின் 29 ஆவது நினைவுதினம் நேற்றுக் காலை நடைபெற்றது.

காலை 5.30 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து நினைவு அஞ்சலி நிகழ்வும் பங்குத்தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், விமானத் தாக்குதலில் உயிர் நீத்தவர் களின் உறவுகளால் ஈகைச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி நடைபெற்றது. (நி-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

### இயக்கச்சி சந்தை வளாகக் கடைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் -2023

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இயக்கச்சி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கீழ்வரும் கடைகளினை 01.01.2023 இலிருந்து நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 14.11.2022 தொடக்கம் 28.11.2022 பிற்பகல்.2 மணிவரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :-28.11.2022 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :-28.11.2022 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :-பச்சிலைப்பள்ளி பிரதேச சபை. தலைமை அலுவலகம்

இயக்கச்சிகடைகளுக்கான கேள்விஅட்டவணை.

| இல | கடை இலக்கம் | ஆககுறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | VS-04 | 96,000.00 | 9,600.00 | 2000.00 |
| 2. | PS-04 | 180,000.00 | 18,000.00 | 2000.00 |
| 3. | PS-07 | 141,000.00 | 14,100.00 | 2000.00 |
| 4. | PS-08 | 126,000.00 | 12,600.00 | 2000.00 |
| 5. | PS-10 | 126,000.00 | 12,600.00 | 2000.00 |
| 6. | PS-11 | 114,000.00 | 11,400.00 | 2000.00 |
| 7. | PS-J2 | 114,000.00 | 11,400.00 | 2000.00 |
| 8. | PS-13 | 114,000.00 | 11,400.00 | 2000.00 |
| 9. | PS-14 | 114,000.00 | 11,400.00 | 2000.00 |


நிபந்தனைகள்:-

01 விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02 கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
03 கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 28.11.2022 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04 ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05 நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாதவாடகைப் பணத்தினை அடுத்தமாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும்.தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசெம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும்.
06 கேள்வி சித்திதாரராக தெரிவுசெய்யப்படுவோர் கேள்வித்தொகையினை முழுமையாகச் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ள வேண்டும்.
07 சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக் கிணங்கநடந்து கொள்ளல் வேண்டும்.
08 சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக 03 மாத கால வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்த வேண்டும்.
09 VS-04 கடை மரக்கறி வியாபாரத்திற்கு மற்றும் பழ வியாபாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
10 சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11 கேள்விபத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
12 மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்.**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை-பளை.**

(C-5259) 14.11.2022

## 19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத்தொடர் இலங்கையில்



2024 மற்றும் 2027 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் 19 வயதுக் குட்பட்டோருக்கான இருபது- 20 உலகக் கிண்ணத் தொடர்களை நடத்தும் நாடுகளின் விபரங்களை சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்ட ஆடவர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை நடத்தும் உரிமையை இலங்கை பெற்றுள்ளது.

இதனைவிட 2024 மற்றும் 2027க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர்களை நடத்த இலங்கைக்கு மேலதிகமாக சிம்பாவே, நமீபியா, மலேசியா, தாய்லாந்து, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஐசிசி 19 வயதுக்குட்பட்ட ஆடவர் உலகக் கிண்ண தொடர் 2024 ஆம் ஆண்டு இலங்கையில் நடத்தப்படும். (நி)

# நீரிழிவும் சித்தமருத்துவமும்

சித்த மருத்துவத்தில் நீரிழிவானது மதுமேகம் அல்லது இனிப்புநோய் என அழைக்கப்படுகிறது. வள்ளுவப் பெருந்தகை கூட **"உணவே மருந்து"** எனக் குறிப்பிடுகின்றார்.

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்"**

மனித வாழ்க்கைக்கு உணவு அவசியம் ஆனால் உணவே வாழ்வாகி விடக்கூடாது.

முக்கியமாக இந்த நீரிழிவு நோயில் உணவுக் கட்டுப்பாட்டு மிகமிக அவசியம். இயற்கை உணவு களிற்கு பெரும்பாலும் குற்றங்கள் கிடையாது. நீரிழிவு நோயாளிகள் குறிப்பாக பாரம்பரிய உணவுகளில் பெரிதும் பயன்படுத்தல் கூடியது சிறு தானிய உணவுகளாகும். சிறுதானியங்களான சாமை. தினை. வரகு. குரக்கன் போன்ற தானியங்கள் சிறுதானியங்களாக கொள்ளப் படுகின்றன. அதனுள் கம்பும் அடங்கும்.

பெருந்தானியங்களாக கோதுமை அரிசி. சோளம். அரிசி என்பன அடங்குகின்றன. பெருந் தானியங்களுடன் ஒப்பிடுகையில் சிறுதானியங் களில் நார்ச்சத்து அதிகம். இதனால் சமிபாடு மெது வாக நிகழ்வதோடு மாச்சத்தின் இறுதி விளைவான குளுக் கோசு சிறிது சிறிதாகவே அகத்துறிஞ்சப் படும். அத்துடன் சிறுதானியங்களில் உயிர்ச்சத்து B. பொஸ்பரஸ். இரும்புச்சத்து. கல்சியம்.பொட்டாசியம். மக்னீசியம். நார்ச் சத்து போன்ற கனிமங்களும் காணப்படும்.

இதனால் நீரிழிவு நோயாளிகளுக்கு மலம் இலகுவாக வெளியேறும். மேலதிக கொழுப்புக்கள் அகத்துறிஞ்சுதல் தடுக்கப் படும். நோய் எதிர்ப்பா ற்றலையும் அதிகரிக் கின்றது. எனவே சிறுதானி யங்களினால் ஆன சாமையரிசி கஞ்சி. குரக்கன் பிட்டு. குரக்கன் ரொட்டி. குரக்கன் இடியப்பம். வரகரிசி கஞ்சி. வரகரிசி தோசை. தினை இட்லி. கம்பரிசி கஞ்சி போன்ற உணவு முறைகளை நீரிழிவு நோயாளிகள் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

அதே போன்று நீரிழிவு நோயாளிகள் கீரை வகைகள். இலை வகைகளின் பாவனையை கூட்டி நிலத்திற்கு கீழ் விளையும் கிழங்கு வகை களை குறைத்துக் கொள்ள வேண்டும். எனினும் நார்ச்சத்து கூடிய கருணைக்கிழங்கு. காட்டு கருணைக் கிழங்கு. என்பவற்றை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.




**உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது**

நீரிழிவு நோயாளிகளுக்கு 1 1/2 கரண்டி அளவு சோறு போதுமானது. அசைவ உணவு உண்ணும் நீரிழிவு நோயாளிகள் தங்களுக்குத் தேவையான புரதச்சத்தை சிறிய மீன்கள். கோழி இறைச்சி. முட்டை போன்றவற்றில் பெற்றுக் கொள்ள முடியும். இறைச்சி. முட்டை பாவனை கூட அளவாகவே பயன்படுத்த வேண்டும்.

நன்றாக பழுத்த பழங்களை பயன்படுத்து வதை தவிர்க்க வேண்டும். மரக்கறி வகைகளில் நீத்துப்பூசணி.முள்ளங்கி. பப்பாசிப் பிஞ்சு. அம்பரலங்காய்.பாகற்காய். குருவித்தலைப் பாகல். காற்றோட்டிக்காய் போன்றவற்றையும் மற்றும் பிஞ்சு மரக்கறி யாக அவரை இனங்களில் சிறகவரை. கொத்தவரை. பனி அவரை போன்றவற்றை பயன்படுத்தலாம்.

இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப் படுத்தக் கூடியதும் இலைக் கீரையாக பயன் படுத்தக் கூடியது மான மூலிகைகளாக சிறு குறிஞ்சா. பொன்னாவரசு. ஆரைக்கீரை போன்றவற்றை பயன்படுத்தி பச்சடி. துவையல். கடையல் போன்ற உணவு முறைகள் மூலம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

மேற்கூறிய உணவுக் கூறுகளை மாற்றி மாற்றி பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீரிழிவு நோயா ளிகளுக்கு அதி உயர் அழுத்தம்.மாரடைப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளதால் உப்பு பாவனையை நன் றாக குறைத்துக் கொள்ள வேண்டும்.

இளங்கன்று பசுப்பாலை அளவான தீயில் வற்றக் காய்ச்சி ஆடை நீக்கி ஒரு கப் பால் இரவில் அருந்தலாம். இவ்வாறு பயன்படுத்தும் போது கொழு ப்பு நீங்கலான புரதச்சத்து. உயிர்ச்சத்துக்கள். கனிமங்கள் நிறைந்த பால் கிடைக்கின்றது.

நீரிழிவு நோயாளிகள் தேநீருக்கு பதிலாக ஆவரசு பெருஞ்செடியின் இலை. காய் . பூ. பட்டை. வேர் ஆகியவற்றை சேகரித்து நன்கு கழுவி உலர்த்தி அருவல் நொருவலாக இடித்து / அரைத்து தேநீர் பொடியாக தயாரித்து வைத்து கொண்டு 1 1/2 கரண்டி ஆவரை பொடிக்கு 200 ml வெந்நீர் விட்டு 10 நிமிடம் ஊறவைத்து கலக்கி வடித்து காலை. மாலை அருந்தி வந்தாலும் நீரிழிவு நோய் கட்டுப் பாட்டில் இருக்கும்.

அதேபோன்று கோப்பி பானத்திற்கு பதிலாக நாவல் கோப்பியையும் பயன்படுத்த முடியும். இதற்கு நாவல் விதைகள். கொத்த மல்லி. சின்ன சீரகம். ஏலம் . வேர்க் கொம்பு என்பவற்றை வீட்டில் தயாரித்து கோப்பி தூளின் அளவுப்படி எடுத்து இடித்து தூளாக்கி தனியாக கோப்பியாகவும் பயன்படுத்த லாம். பசுப்பாலுடனும் காலை. மாலை பயன்படுத்த லாம்.

பொதுவாக நீரிழிவு நோயாளிகள் எண் ணெய் வகைகளை குறைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.எமது மருத்துவத்தின் படி நல்லெண்ணெய் ஓரளவு பயன்படுத்திக் கொள்ளலாம்.

நீரிழிவு நோயாளிகளுக்கு எமது பாரம்பரிய உணவில் முக்கிய உணவு முறையின் தவிட்டு சத்துடன் கூடிய சிவத்தப்பச்சரிசி முதலியவற்றை நீரில் நனைய வைத்து வடித்து அந்த ஈர அரிசியுடன் ஆவரசம் இலை. சிறு குறிஞ்சா இலை போன்ற வற்றை நீரில் கழுவி சேர்த்து இடித்து அரித்த மாவில் களி. பிட்டு. சப்பாத்தி போன்ற உணவுக் கூறுகளாக தயாரித்து எடுக்கலாம்.

நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்த கஞ்சியாக வெந்தயக் கஞ்சி.இலைக்கஞ்சி போன்றவற்றை பயன்படுத்தலாம்.

கறிவேப்பிலைக்கும் இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்படுத்தும் தன்மை இருப்பதால் கறிவேப்பிலை கஞ்சி. கறிவேப்பிலை சம்பல். கறி வேப்பிலை துவையல் போன்ற பாரம்பரிய உணவு முறைகளை பயன்படுத்துவதும் ஆரோக்கியமான முறையாகும்.

மேலும் சீனி. சொக்லேட் வகைகள்.கேக் வகைகள் . ஐஸ்கிறீம் போன்ற பதனிடப்பட்ட உணவுகளை தவிர்த்துக் கொள்ளல் அவசியமாகும்.

நீரிழிவு நோயாளிகள் மோரைப் பயன்படுத்தலாம். எமது பாரம்பரிய உணவுகளில் தானிய உணவுகளில் பெரும்பாலும் உயிர்ச்சத்துக்கள் அவற் றின் உட்கோதுகளில் தவிட்டுடனேயே காணப்படுகிறது. முக்கியமாக உயிர்ச்சத்து B இதனுள் அடங்கும்.

இதை எம் முன்னோர்கள் அறிவார்ந்து வெளி கோதுகளான உமியை அகற்றி முழுமையாக தீட்டாமல் தவிட்டுடன் தீட்டி பயன்படுத்திய முறை ஆரோக்கியமான ஒன்றாகும்.

இங்கு குறிப்பிடப்பட்ட மூலிகைகள் . உணவு முறைகள். பத்திய முறைகள் எமது பிரதேசத்தைச் சார்ந்தவையே. இதே போன்று நீரிழிவு நோயாளிகள் உடற் பயிற்சி. நடைப்பயிற்சி போன்றவற்றிற்கும் முக்கியத் துவம் கொடுக்க வேண்டும். உதா ரணமாக சுஸ்ருதர் எனும் சித்தர் நீரிழிவு நோயாளி தினமும் நான்கு மைல் தூரமா வது நடக்க வேண்டும் எனக் குறிப்பிட் டுள்ளார்.

அத்துடன் நீரிழிவு நோயாளிகள் தத்தம் மதம் சார்ந்த வழிபாட்டுடன் கூடிய நேர் மறை எண்ணங் களை கொண்டவர்களாகவும் தமது வாழ்வியலை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்**
**M.D(Siddha)India**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**சித்தமருத்துவத்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலமைப்பு பேரவை
# சிவில் சமூக உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

21 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக் கப்பட்ட அரசியலமைப்பு பேரவைக்கு சிவில் சமூக உறுப்பினர்களை நியமிக்க தகுதியான நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த விண்ணப்பங்களை பாரா ளுமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, எந்தவொரு அரசியல் கட்சியிலும் உறுப் பினர்களாக இல்லாதவர் கள், பொது அல்லது தொழில் வாழ்க்கையில் சிறந்த ஆளுமை கொண் டவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். (நி)

### உணவுப் பாதுகாப்பு ஆலோசகராக சரத் வீரசேகர நியமனம்



(கொழும்பு)

உணவுப் பாதுகாப்பு தொட ர்பான ஜனாதிபதியின் ஆலோ சகராக முன்னாள் அமைச் சரும் கொழும்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சரத் வீரசேகர நிய மிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி ஜனாதிபதி அலுவ லகத்தில் இருந்தே அவர் பணி யாற்றவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (நி)

## வரவு- செலவுத்திட்ட உரையை முன்னிட்டு
# விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

பிரதமர் ஆற்றவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடு கள் அமுல்படுத்தப்பட்டுள் ளன.

நிதி, பொருளாதார ஸ்தி ரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வரவு செலவுத் திட்ட உரையை ஆற்றவு ள்ளார்.

இதனை முன்னிட்டு பாராளுமன்ற உறுப்பினர் களின் அறைகள் உட்பட பாராளுமன்ற கட்டடத் தொகுதி முழுவதும் சோத னைக்கு உட்படுத்தப்பட்டது.

அதேவேளை இன்று பார்வையாளர் கூடம் தூதரக அதிகாரிகளுக்கு மட்டுமே திறக்கப்படும் என் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த தின த்தில் அப்பகுதியில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 17 - 03 - 1967



மறைவு 13 - 11 - 2022

வலம்புரி பத்திரிகையில் பணியாற்றிய

## திரு. உலகநாதன் பீஷ்மா

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம்.அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்

வலம்புரி நிர்வாகம்

# சீன உயர்மட்ட தூதுவர் இலங்கை வந்தடைந்தார்

(கொழும்பு)

வெளிநாடுகளுடனான நட்புறவுக் கான சீன மக்கள் சங்கத்தின் தலைவர் லின் சோங்டியன் ஐந்து நாள் பயணமாக இலங்கைக்கு வந்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு நேற்று முன்தினம் சனிக் கிழமை இலங்கை வந்ததாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நட்புற வையும் ஒத்துழைப்பையும் வளர்க்கும் வகையில் அவரது பயணம் அமைந்து ள்ளது. இந்த விஜயத்தின் போது, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அரச உயர்மட்ட அதிகாரிகளை சந்திக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார். (நி)

# நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலைய செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

திருத்தப் பணிகள் காரணமாக கடந்த ஜூன் மாதம் இடை நிறுத்தப்பட்ட நுரைச் சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டாம் அலகை இன்று திங்கட் கிழமை மீண்டும் தேசிய மின்கட் டமைப்பில் இணைப்பதற்கு எதிர்பார்ப் பதாக இலங்கை மின்சார சபை தெரி வித்துள்ளது.

இதற்கமைய 300 மெகா வோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டு 900 மெகா வோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மின்சார உற்பத்தி க்காக 3 கப்பல்களில் நிலக்கரி இறக்கு மதி செய்யப்பட்டுள்ளன.மேலும் நுரைச் சோலை நிலையத்தின் மூன்று அலகுகளும் செயற்படுமாயின் குறித்த நிலக்கரி 24 நாட்களுக்கு போதுமான தாக இருக்கும் எனவும் இலங்கை மின்சாரசபை குறிப்பிட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

14.11.2022
ஐப்பசி 28, திங்கட்கிழமை
சஷ்டி பின்னிரவு 2.06 மணிவரை

புனர்பூசம் பிற்பகல் 12.47 மணிவரை
சுபநேரம் 12.07-1.37 மணிவரை
இராகுகாலம் 7.37-9.07 மணிவரை

சந்திராஷ்டமம்
மூலம், பூராடம்

வளவன்


மேஷம்

சுப நிகழ்வுகளில் கல ந்து கொள்ளும் வாய்ப் புண்டு, சிந்தனை ஆற் றலால் சிறப்படைவீர் கள், வெளியூர்த் தொட ர்புகள் அனுகூலம் தரும், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கடகம்

வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண் ணம் உருவாகும், கொடு க்கல் வாங்கல்களில் கவனம் தேவை, வழிபா ட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


துலாம்

தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந் தித்து மகிழ்வீர்கள், குடும்பத்தினரின் ஒத் துழைப்பு கிடைக்கும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.


மகரம்

நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், தொழி லில் எதிர்பார்த்த சலு கைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூல முண்டு, போசன சுகமுண்டு.


ரிஷபம்

கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலை விருத்தி செய்யும் எண் ணம் உருவாகும், உறவி னர்கள் வழியில் ஒத்து ழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.


சிம்மம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், காரிய அலைச்சல்கள் சற்று அதிக ரிக்கும், சுபவிரயங்கள் கூடும் நாள்.


விருச்சிகம்

சுறுசுறுப்போடு செயற் படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன் மையுண்டு, தொலை பேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பி ர்கள், தன்னம்பிக்கையு டன் செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள்.


மிதுனம்

குடும்பத்தில் ம்கிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், நாவன் மையால் நல்ல பெயர் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.


கன்னி

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருங்கால நலன் கருதி புதிய திட்ட ங்கள் தீட்டுவீர்கள், பொருளாதார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


தனுசு

குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடு களில் குறை கண்டு கூறலாம், காரிய வெற் றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழிலில் போட்டிகள் அதிகரிக்கும்.


மீனம்

பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற் சிகள் கைகூடும், தடைப் பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெரிய மனிதர்களின் தொடர் புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ வைப்பதில் தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 27





ளைப் பார்த்தபோது ஏற்பட்ட அருவருப்பு உணர்ச்சியை அவன் மறக்கவில்லை. அத்தகையவளிடம் இந்த வீரப் பழுவேட்டரையருக்கு என்ன மோகமோ தெரியவில்லை. அதைவிட அதிசயமானது ஆழ்வார்க்கடியானது பைத்தியம். இந்தப் பல்லக்கு இங்கே வைக்கப்பட்டிருப்பதினாலே தான் அவனும் சுவர் மேல் காத்திருக்கிறான் போலும்!

ஆனால் அவனுக்கும் அவளுக்கும் என்ன உறவோ என்னமோ. நமக்கு என்ன தெரியும்? அவள் ஒருவேளை அவனுடைய சகோதரியாயிருக்கலாம் அல்லது காதலியாகவும் இருக்கலாம். பழுவேட்டரையர் பலவந்தமாக அவளைக் கவர்ந்து கொண்டு போயிருக்கலாம்! அவ்வாறு அவர் செய்யக் கூடியவர் தான். அதனால் அவளைப் பார்த்துப் பேச ஒரு சந்தர்ப்பத்தை ஆழ்வார்க்கடியான் எதிர்பார்த்து இப்படியெல்லாம் அலைகிறான் போலும்! இதைப் பற்றி நமக்கு என்ன வந்தது? பேசாமல் போய்ப் படுத்துத் தூங்கலாம்.

இப்படி அந்த இளைஞன் முடிவு செய்த சமயத்தில், கீழே நடந்த பேச்சில் தன்னுடைய பெயர் அடிபடுவதைக் கேட்டான். உடனே சற்றுக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

"உம்முடைய குமாரனுடைய சிநேகிதன் என்று ஒரு பிள்ளை வந்திருந்தானே? அவன் எங்கே படுத்திருக்கிறான்? நம்முடைய பேச்சு எதுவும் அவனுடைய காதில் விழுந்து விடக்கூடாது. அவன் வடதிசை மாதண்ட நாயகரின் கீழ் பணி செய்யும் ஆள் என்பது நினைவிருக்க வேண்டும்.

நம்முடைய திட்டம் உறுதிப்பட்டு நிறைவேறும் காலம் வருவதற்குள் வேறு யாருக்கும் இதைப் பற்றித் தெரியக் கூடாது. அந்தப் பிள்ளைக்கு ஏதாவது கொஞ்சம் தகவல் தெரிந்து விட்டது என்ற சந்தேகமிருந்தால் கூட அவனை இந்தக் கோட்டையிலிருந்து வெளியே அனுப்பக் கூடாது. ஒரேயடியாக அவனை வேலை தீர்த்து விடுவது உசிதமாயிருக்கும்"

இதைக் கேட்ட வந்தியத்தேவனுக்கு எப்படி இருந்திருக்குமென்று ஊகித்துக் கொள்ளலாம். ஆனாலும் அந்த இடத்தை விட்டு அவன் நகரவில்லை. அவர்களுடைய பேச்சை முழுதும் கேட்டே விடுவது என்று உறுதிசெய்து கொண்டான்.

வடதிசை மாதண்ட நாயகர் யார்? சுந்தரசோழ சக்கரவர்த்தியின் மூத்த குமாரர். அடுத்தபடி சோழ சிம்மாசனம் ஏறவேண்டிய பட்டத்து இளவரசர். அவரிடம் தான் வேலை பார்ப்பதில் இவர்களுக்கு என்ன ஆட்சேபம்? அவருக்குத் தெரியக் கூடாத விடயம் இவர்கள் என்ன பேசப் போகிறார்கள் ?

அச்சமயம் கந்தமாறன் தன் சிநேகிதனுக்குப் பரிந்து பேசியது வல்லவரையனின் காதில் விழுந்தது."மேல்மாடத்து மூலை மண்டபத்தில் வந்தியத்தேவன் படுத்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான். இந்தக் கூட்டத்தின் பேச்சு அவன் காதில் விழப் போவதில்லை. தனக்குச் சம்பந்தமில்லாத காரியத்தில் அவன் தலையிடுகிறவனும் அல்ல. அப்படியே அவன் ஏதாவது தெரிந்து கொண்டாலும், அதனால் உங்கள் யோசனைக்குப் பாதகம் ஒன்றும் நேராது; அதற்கு நான் பொறுப்பு!" என்றான் கந்தமாறன்.

"உனக்கு அவனிடம் அவ்வளவு நம்பிக்கை இருப்பது குறித்து எனக்கும் மகிழ்ச்சிதான்.

ஒரு வேளை, இப்போது கூட இந்தப் பல்லக்கிலேயே பழுவேட்டரையருடைய இளம் மனைவி இருக்கிறாளோ, என்னமோ? ஆகா! இந்த வீராதி வீரரின் தலைவிதியைப் பார்! இந்த வயதில் ஓர் இளம்பெண்ணிடம் அகப்பட்டுக் கொண்டு அவளுக்கு அடிமையாகித் தவிக்கிறார்!

அப்படியொன்றும் அவள் ரதியோ, மேனகையோ, ரம்பையோ இல்லை! வந்தியத்தேவன் ஒரு கணம் அவ

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### அது ஏன்?

(நேற்றைய தொடர்ச்சி)

சாந்தசீலரும் "நான் உன்னைப் போலப் படித்திரா விட்டாலும் உன்னைப் பற்றி ஒன்று தெரிந்து கொண்டிருக்கிறேன். நீ படித்ததை வாழ்க்கையில் கடைப்பிடிக்கவில்லை என்பதே அது.

நீ ஒரு குருவிடம் கொஞ்ச காலம் இருந்தால் சரியாகிவிடுவாய்" என்றார். அது கேட்டு அங்கிருந்த சிலர் கேசவனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார்கள்.


கேசவன் கோபம் கொண்டு "ஐயா! நீங்கள் பல இடங்களுக்குச் சென்று வந்திருக்கிறீர்களே. என் குருவாக இருக்கத் தகுதி பெற்றவர் யாராவது இருக்கிறாரா?" என்று கேட்டான். சாந்தசீலரும் "ஆம் இருக்கிறார். வாணிதாசர் என்பது அவர் பெயர்.

அவர் மாபெரும் பண்டிதர் கவிஞரும் கூட. அவர் தாம் எழுதியவற்றை ஊர் ஊராக எடுத்துப் போய்ப் படித்துக் காட்டுகிறார்.

இப்படிச் செய்வது அவர் தம் படைப்புகளில் ஏதாவது குற்றம் குறையை யாராவது சுட்டிக் காட்டுகிறாரா என்று காணத் தான். ஆனால் இதுவரை யாரும் அவரது நூல்களில் ஒரு தப்பிதம் இருப்பதாகக் கூட கூறவில்லை. என்றாவது அவர் இந்த ஊருக்கும் வரக்கூடும் நீ அவரைக் கண்டு பேசிப் பார்" என்றார். அப்போது முதல் கேசவன் என்று தன் ஊருக்கு வாணிதாசர் வருவார் என்று எதிர் பார்க்கலானான்.

ஒரு நாள் வாணிதாசரும் தம் மனைவி மக்களுடன் அந்த ஊருக்கு வந்தார். கிராமப் பிரமுகர் ஒருவர் அவர் தங்க வசதி செய்து கொடுத்தார். அவரது காவியங்களைப் படித்துக் காட்ட ஏற்பாடும் செய்தார்.

வாணிதாசர் தமது புதிய படைப்பை அவ்வூராருக்குப் படித்துக் காட்டினார். அது ஒரு சன்னியாசியின் கதை. [illegible] யாமலும் இருந்த நாணு



என்பவன் சன்னியாசியாகிறான். எந்த நூலையும் படிக்காத அவன் நாளாவட்டத்தில் பேரறிஞனாகி மக்கள் மதிப்பைப் பெறுகிறான். இது தான் அக்கதை.

வாணிதாசர் அதனை மிக நன்றாக சொற்கட்டுடன் எழுதி இருந்தார். அதைக் கேட்டு அவ்வூரார் அவரைப் பாராட்டினார்கள். அப்போது கேசவன் எழுந்து நின்று "தங்களது இந்தப் படைப்பால் விபரீதம் நிகழும்.

படிப்பில்லாமல் வேலை எதுவும் செய்யாமலிருந்த ஒருவன் சன்னியாசியாகி எல்லோர் பாராட்டையும் பெறுவதாக நீங்கள் கூறியுள்ளதால் படிக்காமலும் வேலை எதுவும் செய்யாமலும் இருந்தால் எவனும் எல்லோர் மதிப்பையும் பெற்று விடலாம் என்று தவறான எண்ணத்தை எல்லோர் மனதிலும் ஏற்படுத்தி விடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவானில் மோதிய விமானங்கள் 6 பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்ஸாஸில் இடம் பெற்ற விமான கண்காட்சியின் போது இரண்டு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

போயிங் ரக பி-17 என்ற விமானம் ஒன்றும் சிறிய ரக விமானம் ஒன்றும் இவ்வாறு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த இரண்டு விமானங்களையும் செலுத்தியவர்களின் நிலை இதுவரை யில் கண்டறியப்படவில்லை.

குறித்த விமானத்தில் 6 பேர் இருந்தனர். அவர்கள் அனைவரும் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

குறித்த பகுதியில் மீட்புப் பணிகள் இடம்பெறுவதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# 1.7 பில்லியன் மக்கள் உடல் பருமனால் பாதிப்பு

(ஜெனிவா)

உலகில் வயது வந்தவர்களும் சிறுவர்களும் என 1.7 பில்லியன் மக்கள் உடல் பருமன் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் தரவுகளை மேற்கோள்காட்டி வேல்ட் மீட்டர் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 340 மில்லியன் இளைஞர், யுவதிகளும் 39 மில்லியன் சிறுவர்களும் அடங்குகின்றனர். எதிர்வரும் 2025 ஆம் ஆண்டளவில் சுமார் 167 மில்லியன் மக்கள் உடல் பருமன் அல்லது அதிக எடை கொண்டவர்களாக இருக்கலாம் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே நாளை 15 ஆம் திகதி மொத்த உலக சனத்தொகையின் எண்ணிக்கை எட்டு பில்லியனை தாண்டும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.

அடுத்த ஆண்டில் சீனாவை தாண்டி, உலகில் அதிக சனத்தொகையை கொண்ட நாடாக இந்தியா மாறும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

**அமெ.பாராளுமன்றில்**

# செனட் சபையை கைப்பற்றியது ஜோ பைடன் கட்சி

(வோஷிங்டன்)

பிரதிநிதிகள் சபையில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் குடியரசு கட்சி 211 இடங்களை கைப்பற்றி பெரும்பான்மையை நெருங்கியது. நெவாடாவில் ஜனநாயக கட்சி வெற்றி பெற்றதால் செனட் சபையை கைப்பற்றியது. அமெரிக்க பாராளுமன்ற பிரதிநிதிகள் சபை, செனட் சபைகளுக்கு கடந்த 8 ஆம் திகதி தேர்தல் நடந்தது. பிரதிநிதிகள் சபையில் மொத்தம் உள்ள 435 இடங்களும் செனட் சபையில் உள்ள 100 இடங்களில் 35 இடங்களுக்கும் வாக்குப்பதிவு நடந்தது. தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. குடியரசு கட்சி, ஜனநாயக கட்சி இடையே கடும் போட்டி நிலவியது. பிரதிநிதிகள் சபையில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் குடியரசு கட்சி 211 இடங்களை கைப்பற்றி பெரும்பான்மையை நெருங்கியது. ஜனநாயக கட்சி 204 இடங்களை பெற்றது. செனட் சபையை ஜனாதிபதி ஜோ பைடனின் ஜனநாயக கட்சி கைப்பற்றியது. அக்கட்சி 50 இடங்களை பெற்றுள்ளது. குடியரசு கட்சி வசம் 48 இடங்கள் உள்ளன. இரு கட்சிகள் இடையே கடும் இழுபறி நிலவிய நிலையில் நெவாடாவில் ஜனநாயக கட்சி வெற்றி பெற்றதால் செனட் சபையை கைப்பற்றியது. (நி)


# யாழ்ப்பாணம் மாநகரசபை வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களை விநியோகிக்க, சேவைகளை வழங்க ஆர்வமுள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், உள்ளூர் முகவர்கள், வழங்குநர்களிடமிருந்து 'வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள்' கோரப்படுகின்றன. இதற்கான படிவங்களை நேரடியாக யாழ். மாநகரசபையின் கொள்வனவுப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

| குறி. இல. | பொருட்கள் | குறி. இல. | சேவைகள் |
|---|---|---|---|
| G1 | காகிதாதிகள், எழுதுபொருட்கள். | S1 | அனைத்து அச்சிடுதல் நடவடிக்கைகள். |
| G2 | அலுவலகத் தளபாடங்கள் (இரும்புருக்கு, மரம், பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ்) | S2 | விளம்பரப்பலகைகள் அமைத்தல். |
| G3 | மேல் நாட்டு மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் | S3 | ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல். |
| G4 | சித்த மருத்துவ மருந்துகள் | S4 | ஓட்டுவேலைகள், உலோக வேலைகள். |
| G5 | சிற்றுண்டி, மதிய உணவு | S5 | ஏற்றியிறக்கும் வேலைகளுக்குப் பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல். |
| G6 | மென்பானங்கள், பால், பால்மா வகைகள், தேயிலை, சீனி, வேறு உணவுப் பொருட்கள் சம்பந்தமானவை. | | |
| G7 | கோலவுடைத்துணிகள், யன்னல் திரைச்சீலைத் துணிகள், நிலவிரிப்புகள், படுக்கை, மேசை விரிப்புகள், தலையணை உறைகள், மெத்தைகள், மழை அங்கிகள், கால்மிதிகள். | S6 | சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்துதல். |
| G8 | தோற் பொருட்கள், பாதணிகள். | S7 | மின் மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் திருத்தம். |
| G9 | கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடு, கூரைத்தகடு, சீலிங், கம்பி வகைகள்). | S8 | மின் கலங்களுக்கு மீள மின்வலுவூட்டல். |
| G10 | தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள். | S9 | இறப்பர் முத்திரை, புளொக் தயாரித்தல். |
| G11 | கற்கள், சல்லிகள், கிறவல், கருங்கல் துகள், மணல், ABC கலவை. | S10 | **அ). வாகனங்கள் பழுது பார்த்தல்-உள்வாரியான திருத்தம்,** இயந்திரம் மற்றும் வாகனப்பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள்.<br>**ஆ). வாகனம் பழுது பார்த்தல்-வெளிவாரியான திருத்தம்** தகடுகள் ( Tinkering) பழுது பார்த்தலும் பெயின்ட் அடித்தலும். |
| G12 | நீர வழங்கு பொருட்கள், PVC குழாய்கள், நீர்த்தாங்கி, நீர்ப்பம்பிகள். | S11 | வாகனம் சேவிஸ் செய்தல் |
| G13 | வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள். | S12 | கணனிகள், பிறின்ரர்கள், ஸ்கானர்கள், தொலைநகல், கைவிரல் அடையாள இயந்திரங்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள் திருத்தம். |
| G14 | தேங்காய் மட்டை, விறகு, கிடுகு, சாக்கு. | S13 | கணனிகள் சேர்விஸ் செய்தல். |
| G15 | எரிபொருள், உராய்வுநீக்கிகள், கிறீஸ். | S14 | போட்டோப்பிரதி இயந்திரங்கள் சேர்விஸ் செய்தல். |
| G16 | இரும்புப்பொருட்கள் | S15 | CCTV Camera அதனுடன் தொடர்புடைய பொருட்கள் சேர்விஸ் செய்தல். |
| G17 | பொருத்துகைப் பொருட்களும் கண்ணாடி வகைகளும். | S16 | வளிச்சீராக்கி திருத்தம், சேர்விஸ் செய்தல். |
| G18 | செரமிக் பொருட்கள் | S17 | தனியார் பாதுகாப்புச் சேவை வழங்குதல். |
| G19 | வாகனங்களுக்கான பற்றறிகள், ரயர்கள், ரியூப் முதலியன | S18 | மென்பொருள் வடிவமைப்பு மற்றும் மென்பொருள் மேம்படுத்தல். |
| G20 | தீராந்திகள், நீளபைகள், பலகைகள், பனைமரங்கள், சலாகைகள். | S19 | கனரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்தல். |
| G21 | தீயணைப்புச் சேவைக்குத் தேவையான பொருட்கள். | S20 | தனியார் சுத்திகரிப்பு, திண்மக்கழிவு சேகரிப்பு மற்றும் பிரித்தெடுப்பு சேவைகள் வழங்கல். |
| G22 | மின்சார இயந்திர பொருட்கள், மின்கருவிகள், குளிரூட்டிகள், வீதி விளக்குகள். | S21 | வீதி வேலை, கட்டட நிர்மாணம், பூங்கா /மைதானம் பராமரிப்பு, கனரக வாகனங்கள் கையாளல் ஆகியவற்றிற்கு பயிற்றப்பட்ட தொழிலாளர்களை வழங்குதல். |
| G23 | மேசன் வேலைக்குத் தேவையான பொருட்கள் (தூக்குக்குண்டு, நீர்மட்டம், மூலை மட்டம்) | S22 | திரவக்கழிவு, பரிகரிப்புத் தொகுதியை முகாமை செய்தல். |
| G24 | தச்சு வேலைக்குத்தேவையான பொருட்கள்(வாள், சீவுளி, அரம்) | S23 | சேதனப்பசளை உருவாக்கல், பொதியிடல், சந்தைப்படுத்தல். |
| G25 | வேலைத்தள உபகரணங்கள்(மண்வெட்டி, சுத்தியல், கோடரி, கத்தி, சவள்) | S24 | மீள் சுழற்சிக்குள்ளாக்கக் கூடிய திண்மக்கழிவுகளை மீள் சுழற்சியாளர்களிடம் எடுத்துச் சென்று சந்தைப்படுத்தல். |
| G26 | வெல்டிங், ரிங்கரிங் தொடர்பான பொருட்கள். | S25 | வாடகைக்கு வாகனங்கள் வழங்குதல். |
| G27 | விளையாட்டு உபகரணங்கள், பொருட்கள். | S26 | கோலவுடைகள், திரைச்சீலைகள் தைத்து வழங்குதல். |
| G28 | நூலகங்களுக்குரிய நூல்கள், சஞ்சிகைகள். | S27 | குழாய்க்கிணறு அமைத்தல். |
| G29 | தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கயிறு வகைகள். | S28 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் |
| G30 | சுத்திகரிப்புப் பொருட்களும் கிருமி நாசினிகளும். | | |
| G31 | கணனி, போட்டோப்பிரதி இயந்திரம், தொலைநகல், கைவிரல் அடையாள இயந்திரம் மற்றும் அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் வழங்கல். | | |
| G32 | குடிநீர் சுத்திகரிப்பிற்கான குளோரின். | | |
| G33 | CCTV கமரா, Web கமரா அதனுடன்தொடர்புடைய பொருட்கள். | | |
| G34 | வெற்றுபரல்கள். | | |
| G35 | தார் | | |

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா.1000/= இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையினை "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற பெயருக்குப் பெறப்பட்டு, இதற்கான விண்ணப்பத்தினையும் பூரணப்படுத்தி, வியாபாரபதிவுச் சான்றிதழின்/நிறுவன பதிவுச்சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன், பொருள் சேவை /விவரணப் பட்டியலினையும் இணைத்துக் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2023" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால்மூலம் அல்லது நேரடியாக அனுப்பிவைத்தல் வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புவர்கள் சபையின் 'முன்னரங்கு அலுவலகத்தில்' நேரடியாக கடமை நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும்பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருட்கள், சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள், சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும். வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2023 இற்கான படிவங்களை 14.11.2022 முதல் யாழ். மாநகரசபையின் கொள்வனவுக்கிளையில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் அவற்றுக்கான கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2023" எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபால்மூலம் அல்லது நேரடியாக "முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். 14.12.2022 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

(C-5255)

**14.11.2022.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுரக்ஷா' காப்புறுதி தொகையை குறைக்க கல்வி அமைச்சு தீர்மானம்




(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான "சுரக்ஷா" சுகாதார காப்புறுதி அமைப்பில், மாணவர்களின் பெற்றோர் அல்லது சட்டபூர்வ பாதுகாவலரின் மரணத்திற்கான சுகாதார காப்புறுதித் தொகை 200,000 ரூபாவில் இருந்து 75,000 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதுடன், மாணவர்கள் குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற கட்டாய சரத்தை உள்ளடக்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கான திருத்தப்பட்ட சுற்றறிக்கை கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

பெற்றோர் இருவரும் இறந்தால், இரு தடவைகளில் தனித்தனியாகத் தொகை வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க மாகாண செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு விடுத்துள்ள புதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் படி "எப்போதும் பாதுகாக்க வேண்டும் - தேசத்தின் குழந்தைகள்" என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த காப்புறுதி முறை நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் 11 இலங்கை மீனவர்கள் கைது

## இந்திய ஊடகங்கள் செய்தி வெளியீடு

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் 11 பேர் இந்தியக் கடலோர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் குறித்த 11 மீனவர்களும் 2 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலிங்கப்பட்டினம் கரைக்கு அருகே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

11 மீனவர்களும் மேலதிக விசாரணைகளுக்காக காக்கிநாடா கரையோர பாதுகாப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (நி)

# முட்டைகளை பதுக்கினால் சட்ட நடவடிக்கை-வர்த்தக அமைச்சர்

(கொழும்பு)

முட்டைகளை பதுக்கி வைக்கும் நபர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் முட்டைக்கு தட்டுப்பாடு இல்லை. செயற்கையாக முட்டைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சிலர் நாடகமாட முயற்சிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன், கட்டுப்பாட்டு விலைக்கு மேல் முட்டை விற்பனை செய்யும் வியாபாரிகளை தேடி நுகர்வோர் அதிகாரசபையினர் சோதனை நடத்தியதில், அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த சில வியாபாரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை, தற்போதைய சந்தை நிலவரத்தை கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு முட்டைகளை விற்பனை செய்வது சிக்கலாக உள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். ஆனால் முட்டை விலையை அதிகரிக்க அரசாங்கம் அனுமதி வழங்காது என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (நி)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை**

**பேராசிரியர்.கா.கைலாசநாதக்குருக்கள்**
**நினைவுப்பேருரை - 2022**

பேருரைத் தலைப்பு

**"Sanskrit: Language for Hindu Worship a Sri Lankan Perspective"**

பேருரை வழங்குனர் :

கலாநிதி. ம. பாலகைலாசநாதசர்மா,
முதுநிலை விரிவுரையாளர்,
சமஸ்கிருதத்துறை,
இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி :15.11.2022 [செவ்வாய்க்கிழமை]
பி.ப 3.00 மணி
நிகழ்விடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும்**
**அன்புடன் அழைக்கின்றோம்.**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (C-5254)



**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**
**தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான**
**கேள்வி கோரல்-2023**

1. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2022.11.16 - 2022.11.30 நண்பகல் 12.00 மணிவரை
   கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2022.11.30 பி.ப 14.00 மணிவரை
   கேள்வி திறக்கும் திகதி : 2022.11.30 பி.ப 14.30 மணி
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்க வேண்டும்.
4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் **சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற் கொள்ளப்படும்.**
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக் கட்டணமாக **ரூபா 2,000.00** இனையும் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக **ரூபா 25,000.00** இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
6. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக **ரூபா 400,000/=** ஐ செலுத்தி ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் **மூலப்பிரதி** எனவும் இணைப்படிவத்தில் **இணைப்பிரதி** எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்.) மூலப்பிரதியை அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
8. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
9. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதன்னத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
10. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பெறுகைக்குழுவால்** எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
11. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1 | வல்காமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகம், புத்தூர் | 01 | 01 | 2023.01.01-2023.12.31 |
| 2 | அச்சுவேலி உப அலுவலகம் | 01 | - | 2023.01.01-2023.12.31 |
| 3 | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையம், நீர்வேலி | 01 | 01 | 2023.01.01-2023.12.31 |
| 4 | அக்கரை கடற்கரை சுற்றுலா வளாகம் | 01 | 01 | 2023.01.01-2023.12.31 |
| 5 | அச்சுவேலி கொல்களம், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 01 | - | 2023.01.01-2023.12.31 |
| | மொத்தம் | 05 | 03 | |

**தியாகராஜா நிரோஷ்**
**தலைவர்,**
**உள்ளூராட்சி பெறுகைக் குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**
**2022.11.14** (C-5256)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்காக காத்திருக்காதே உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.

~ அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வெளிநாட்டு அனுசரணையை வலியுறுத்தத் தவற வேண்டாம்

எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியமை அரசியல் களத்தில் ஒரு திருப்புமுனையாக மாறியுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் சேர்ந்து இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தைப் பேசாப் பொருளாக்கின.

இருந்தும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையும் சேர்ந்து இனப் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்தியிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

தவிர, பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையை மீட்பதாக இருந்தால், அதற்குப் புலம்பெயர் தமிழ் மக்களின் பேராதரவு கட்டாயமானதாகும்.

எனினும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாதவரை புலம்பெயர் தமிழ் மக்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தயக்கம் காட்டுவர்.

இதற்கும் மேலாக, உலக நாடுகளில் புலம்பெயர் தமிழ் மக்கள் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் மிகவும் வலிமையுடையவர்களாக மாறிவருகின்றனர்.

எனவே இலங்கைக்கு உதவுவதற்கு யார் முன்வந்தாலும் அவர்களின் முதலாவது கேள்வி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இருப்பது ஏன்? என்பதாகவே இருக்கிறது.

இந்தநிலையில்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாதென்ற உண்மை நன்கு உணரப்பட்டுள்ளது.

அதேநேரம் தமிழ் மக்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்து அரசியல் நடத்த முடியாதென்ற உண்மை தென்பகுதியில் செயன்முறையாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆக, இனிவரும் காலங்களில் அரசியல் என்பது பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பது தொடர்பான உறுதிமொழிகளாக இருக்க முடியுமே தவிர, முன்னர் போல் தமிழ் மக்களுக்கு எதிராகக் கதைத்து அரசியல் நடத்த முடியாதென்பது நிரூபணமாயிற்று.

இந்தநிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி ஆட்சியாளர்கள் சிந்திப்பது தவிர்க்க முடியாதது.

இருந்தும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று ஆட்சியாளர்கள் கருதுவது எதை என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

பொதுவில் தமிழ் மக்களுக்கு உரிமையும் அதிகாரமும் வழங்குவதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் தயங்கவே செய்வர்.

அத்துடன் அவர்கள் தீர்வு என்று கருதுவது தமிழ் மக்களுக்குத் தீர்வாக அமையாமலும் இருக்கும்.

எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழ் அரசியல் தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று ஜனாதிபதி கூறியதற்கு; நாம் தயார் எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருப்பது காலம் உணர்ந்த அறிவிப்பு என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

அதேநேரம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் வெளிநாட்டு அனுசரணை இருப்பது மிகவும் அவசியம் என்பதை நாம் வலியுறுத்த வேண்டும். இல்லையேல் மீண்டுமொரு முறை நாம் ஏமாற்றப்படலாம். கவனம்.

# விமல் வீரவன்ச உள்ளிட்டோர் நடத்திய கூட்டத்தில் பதற்றம்

(கொழும்பு)

கண்டியில் விமல் வீரவன்ச உள்ளிட்டோர் நடத்திய அரசியல் கூட்டத்திற்கு மக்கள் குழுவினர் எதிர்ப்பு வெளியிட்டதால் அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

கூட்டம் முடிவடைந்து விமல் வீரவன்ச உள்ளிட்ட அரசியல்வாதிகள் வெளியேறிய போது, அங்கிருந்த இளைஞர்கள் அவர்களை கூச்சலிட்டு கடுமையாக திட்டியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு மத்தியில் விமல் வீரவன்ச தனது மெய்ப்பாதுகாவலர்களுடன் கூட்டம் நடைபெற்ற மண்டபத்தை விட்டு வாகனத்தில் வெளியேறியனார்.

இருப்பினும் கடும் எதிர்ப்பு காரணமாக வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண உள்ளிட்டோர் வெளியே வர முடியாமல் மண்டபத்திற்குள் இருந்தனர்.

பின்னர் வாசுதேவ மற்றும் திஸ்ஸ விதாரணவும் எதிர்ப்புக்கு மத்தியில் தமது வாகனங்களில் ஏறிச் சென்ற வேளையில் இரு தரப்பினருக்கும் இடையில் பதற்றமான நிலைமை தொடர்ந்தது.

சுமார் 15 நிமிடங்களுக்கு இரு தரப்பினருக்கும் இடையில் பதற்றமான நிலைமை நீடித்தது. (4-7)

# கப்பலிலிருந்து மசகு எண்ணெய் இறக்கும் பணி ஆரம்பம்

நாட்டை வந்தடைந்துள்ள மசகு எண்ணெய்க் கப்பலிலிருந்து எண்ணெய் இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பலில் 99, 978 மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனைத்தவிர நாட்டை வந்தடைந்த மற்றுமொரு கப்பலிலிருந்து 95 ரக பெற்றோலை இறக்கும் பணிகளும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

95 ரக பெற்றோலை ஏற்றிய கப்பல், ஏப்ரல் மாதத்திற்கு பின்னர் நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

குறித்த கப்பலில் 19, 505 மெட்ரிக் தொன் பெற்றோல் கொண்டு வரப்பட்டது. (4-7)

## திலினியின் மோசடி
# ஞானசார தேரரிடம் 3 மணி நேர விசாரணை

(கொழும்பு)

திலினி பிரியமாலியின் மோசடி தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணையின் ஒரு பகுதியாக, பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று முன்தினம் மூன்று மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இந்த பாரிய மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் திரைப்படக் கலைஞர்கள் போன்ற பல முக்கியப் பிரமுகர்களிடம் இருந்து இதுவரை CID வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

இதுவரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம் சந்தேகநபர் 2,510 மில்லியன் ரூபாவை மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரியமாலியுடன் தொடர்பில் இருந்தவர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7)

# 4 மாதங்களாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தின் அதிரடியான நடவடிக்கை காரணமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொடிகாமம்-பாலாவி பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு-உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பெருமளவான உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலாவி மயானத்தை அண்டிய காட்டுப் பகுதியில் கடந்த 4மாத காலமாக இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர்கள் தப்பித்துள்ள நிலையில், 1100லீட்டர் கோடா, 58லீட்டர் ஸ்பிரிட், செப்புச் சுருள் - 4, 6 பரல்கள் ஆகியன மதுவரித் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (4-7,30)

## கிளிநொச்சி மாவட்டத்தில்
# போதைப் பாவனைக்கு எதிராக பேரணி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்குடன் விழிப்புணர்வு செயற்பாட்டை முன்னெடுக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த பொது அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து இளைஞர்களின் எதிர்காலம் இன்றே வலையமைப்பு என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

குறித்த அமைப்பினர் நேற்று தனியார் விடுதியில் ஊடக சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த ஊடக சந்திப்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் போதைப் பொருளுக்கு எதிராக நாளை மறுதினம் புதன்கிழமை 16ம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை துவிச்சக்கர வண்டி பேரணி ஒன்றினை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அனைத்து பொது அமைப்புக்களையும் ஒன்றிணையுமாறு குறித்த ஊடக சந்திப்பில் கோரிக்கை விடுத்திருந்தனர். (4,7,316)

# இரும்பு கம்பியின் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த காலங்களில் பாரிய அளவில் அதிகரிப்பை பதிவு செய்திருந்த இரும்பு கம்பியின் விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, ஒரு தொன் கம்பியின் விலை ஒரு இலட்சம் ரூபாவால் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட ஒரு தொன் கம்பியின் விலை தற்போது 4 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவாக குறைவடைந்துள்ளது. ( நி)

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022**

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்."

- தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, கொழும்புத்துறை, மணியந்தோட்டம், உதயபுரம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் 18 ஆவது வி.ஐ.ஆர் இராணுவ முகாம்- தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவ முகாம்-இரணைப்பாலை, 68 ஆவது பிரிவு - டயலொக் கோபுரம்- இரணைப்பாலை, தேவிபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், கூமரசங்குளம் மாதா கோவிலடி, மகாறம்பைக்குளம், மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி தொடரும் கவனயீர்ப்பு போராட்டம்

(கண்டவாளை)

கிளிநொச்சி கிராஞ்சி இலவங்குடா கடற்பகுதியில் பாரா ம்பரிய தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமைக்கப்பட்டுள்ள அட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் நேற்று 45 ஆவது நாளாகவும் தங்களுடைய போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தனர். (நி-315)



## நொச்சிமோட்டை சாந்தசோலை

## தாய்-சேய் நிலையத்திற்கு செல்லும் வீதியை

# செப்பனிட்டு தருமாறு கோரிக்கை



(நெளுக்குளம்)

வவுனியா நொச்சிமோட்டை கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்ட சாந்தசோலை கிறேசர் வீதியில் அமைந்துள்ள தாய் சேய் நிலையத்திற்கு செல்லும் பிரதான வீதி படுமோசமான நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மழை காலங்களில் அந்நிலையத்திற்குச் செல்லும் கற்பவதிகள் பாதுகாப்பற்ற அவ் வீதியால் பயணிக்கின்றனர்.

இப்பகுதியில் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

எனவே குடும்பநல நிலையத்திற்கு பாதுகாப்பாகச் சென்று வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சாந்தசோலை மகளிர் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-299)



புனர்வாழ்வு திணைக்களத்தால் வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் வறிய நிலையில் உள்ள தமிழ் குடும்பம் ஒன்றுக்கு அண்மையில் வீடு கையளிக்கப்பட்டது.

புனர்வாழ்வு திணைக்களத்தினதும் நன்கொடையாளர்களதும் கிடைக்கப்பெற்ற 7 மில்லியன் நிதி உதவியில் இவ் வீடு அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. (படம்: சதீஸ்)

# நூல் வெளியீடும் விருது வழங்கலும்

(தருமபுரம்)

ஊடகவியலாளரும் சமூக சேவையாளருமான வ.சிவஜோதியின் 51 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு "உறுதிகொண்ட நெஞ்சினாள்" நூல் வெளியீடும் சிவஜோதி ஞாபகார்த்த விருது வழங்கும் விழாவும் எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி திருநகரில் உள்ள லிற்றில் எய்ட் அரங்கில் நடைபெறும். (நி-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 500 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 230 | 220 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 180 | 200 |
| தக்காளி | 400 | 400 | 460 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 180 | 200 |
| கோவா | 350 | 250 | 320 | 350 |
| கரட் | 300 | 500 | 550 | 600 |
| பூசணி | 160 | 150 | 140 | 200 |
| புடோல் | 280 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 160 | 140 | 130 | 150 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 580 | 800 |
| பெரிய வெங்காயம் | 360 | 320 | 320 | 350 |
| பாகற்காய் | 500 | 700 | 500 | 500 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 550 | 540 | 500 | 450 |
| லீக்ஸ் | 320 | 350 | 320 | 350 |
| பீற்றூட் | 180 | 300 | 250 | 350 |
| கறிமிளகாய் | 750 | 700 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 500 | 600 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | — | 480 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 150 | 150 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 65 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 550 | 400 | 400 | 520 |
| முள்ளங்கி | 140 | 200 | 150 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 80 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 120 | 120 | 150 |


## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.

02. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள வழங்குநர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத் துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 16.00 மணிவரை 14.11.2022 ஆம் திகதியிலிருந்து 28.11.2022 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள வழங்குநர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 14.11.2022 தொடக்கம் 28.11.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பிற்கபல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/= (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்களினை பூரணப்படுத்தி 28.11.2022 ஆம் திகதி 15:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேச சபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட அல்லது பிந்திக்கிடைக்கும் பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற் கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

06. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| தொ. இல | பெறுகை விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம். | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (ரூபா.) | வைப்பு செல்லுபடியாகும் காலம். |
| 1 | Desk Top Computer with UPS | 05 Nos | NP/14/41(13)/3/1/15/ Desk Top(St - II)/ 2022 | 01 மாதம் | 10,000.00 | 03 மாதம் (12.02.2023) |
| 2 | Smart Board | 01 Nos | NP/14/41(13)/3/1/15/ Smart Board /2022 | | 5,000.00 | 03 மாதம் (12.02.2023) |
| 3 | Hand Cart (கையால் இழுக்கும் குப்பை வண்டில்) | 04 Nos | NP/14/41(13)/3/1/15/ Hand Card/2022 | | 5,000.00 | 03 மாதம் (12.02.2023) |

தியாகராஜா நிரோஷ், தவிசாளர்,
பிரதேச சபை பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

14.11.2022 (C-5257)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்...

தால், அவருக்கு ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்.

ஐஸ் போதைக்கு அடிமையானவர்கள் கடுமையான மனநோயாளிகளாக மாறியுள்ளதாக விசேட மனநல மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒட்டுமொத்த சமூகத்தையும் ஆக்கிரமித்துள்ள ஹெரோயின், ஹொக்கெய்ன், ஐஸ்போன்ற போதைப்பொருட்களுக்கு இந்நாட்டில் இளைஞர் சமூகம் அதிகளவில் அடிமையாகி வருகின்றது.

போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்துக்கும் அதிகமாகும் என போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## ஹெரோயினுடன்...

குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-7)

## மன்னாரில்...

நிலையில் சாரதிக்கு அருகில் இருந்து பயணித்தவர் பலியாகியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும்வாகனத்தை செலுத்திச் சென்ற சாரதிக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லையெனவும், அவர் மயக்க நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7,285)

## தமிழர்களின்...

மாறு வடகிழக்கு தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடகிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வே தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான தீர்வு என்பதை, வடகிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒன்றாக வலியுறுத்த வேண்டிய சந்தர்ப்பமொன்று எழுந்துள்ளது.

எமது கட்சிகளுக்கிடையில் பல்வேறு பேதங்கள் இருந்தாலும் எமது மக்களின் அடிப்படை அபிலாஷையை வெளிப்படுத்த வேண்டிய இந்த வேளையில் கட்சி வேறுபாடுகளை புறம்வைத்துவிட்டு அதனை உரத்துக் கூற அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இது.

இதற்காக நாளை 15ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களின் இல்லத்தில் ஒன்றுகூடுமாறு தமிழ்க் கட்சித் தலைவர்களாகிய உங்களை அன்போடு அழைக்கிறோம்.

காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு நீங்கள் சமூகம் தருவீர்கள் என்று நம்புகிறோம் என அதில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளது. (4-7)

## பாடசாலையில்...

மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி மாணவர்களின் பாடசாலை வருகை 95 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சில மாகாணங்களில் வாரநாட்களில் திங்கட்கிழமையுடன் ஒப்பிடுகையில் வெள்ளிக்கிழமை மாணவர்களின் வருகை வெகுவாக வீழ்ச்சியை பதிவு செய்கிறது. (4-7)

## தீயில் எரிந்த...

தங்கமுத்து (வயது-80) என்பவராவார்.

குளிப்பதற்காக சுடுதண்ணீர் வைத்துப் பானையை தூக்க முற்பட்டவேளை சேலையில் தீ பற்றியுள்ளது.

தீ பரவியதை அடுத்து சுடுதண்ணீர்ப் பானை கை தவறி வீழ்ந்த போது, சுடுதண்ணீராலும் சேலையில் பற்றிய தீயினாலும் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

கடந்த 11.10.2022 அன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 11ஆம் திகதி மூதாட்டி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ் உயிரிழப்புத் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.(4-7,60)

## மாவீரர் நாளன்று...

ணைக்காக தமது இராணுவ முகாமுக்கு வருகைதருமாறு ஏற்பாட்டாளர்களை அழைத்துச் சென்றிருந்தனர்.

இதன்படி இராணுவ முகாமுக்கு சென்ற ஏற்பாட்டாளர்களை விசாரித்த 592ஆவது பிரிகேட் முகாமின் அதிகாரி மாவீரர் நாளினை இப்பகுதியில் அனுஷ்டிக்க முடியாது என எச்சரித்ததோடு இப்பகுதி முழுவதும் இராணுவத்துக்கு சொந்தமான பகுதி எனவும் வேண்டும் என்றால் நீங்கள் துப்புரவு செய்யலாம் ஆனால் 27ஆம் திகதி சுடர் ஏற்ற முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஏற்பாட்டுக் குழுவினர் இப்பகுதி பிரதேச சபைக்கு சொந்தமான பகுதி அதனையே நாங்கள் துப்புரவு செய்கின்றோம்.

இறந்த எமது உறவுகளை நினைவுகூர தடை எதுவும் இல்லை என அரசாங்கம் கூறியுள்ளபோதிலும் இராணுவத்தினர் இவ்வாறு ஏன் நடந்து கொள்கின்றீர்கள் எனத் தெரிவித்தனர். (4-7)

## இருளில்...

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீதர் தியேட்டரில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணம் செலுத்தாதமையால், மின்சார சபை ஊழியர்களால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளமையால், கட்சியின் தலைமை அலுவலகம் இருளில் மூழ்கியுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டுக்கு முன்னரான மின் கட்டண நிலுவை தொகை மற்றும் அதற்கான அபராத தொகை போன்றவை செலுத்தப்படவில்லை என்றே மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக கட்சியினர் தெரிவித்துள்ளனர். (4-7,33)

## பாரா...

ஜனாதிபதியின் பாதீட்டு உரை மீதான விவாதம் நாளை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது.

பின்னர் குழுநிலை விவாதம் 23ஆம் திகதி முதல் டிசம்பர் 8ஆம் திகதி வரை நடத்தப்படும்.

இது தொடர்பான வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் 8ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதேவேளை, பாதீட்டில் 2023ஆம் ஆண்டுக்காக 7,885 பில்லியன் ரூபாய் மீதிப்பிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டு பாதீட்டு மதிப்பீடு 29.2 சதவீதம் அதிகரித்துள்ளதாக ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் இவ்வாறு அதிக தொகை மதிப்பிடப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127


### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 13/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1393
வெற்றி இலக்கங்கள்: மகரம் 5 9 7 6 2 9
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2022.11.13
சீட்டிழுப்பு இலக்கம் - 968
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கங்கள்: 10 27 41 58

### கொவிசெத

திகதி 2022.11.13
சீட்டிழுப்பு இலக்கம் 3180
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 13 22 60 75

### மெகா பவர்

திகதி 13/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1286
ஆங்கில எழுத்து: G
சுப்பர் இலக்கம்: 04
வெற்றி இலக்கங்கள்: 25 41 54 78

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.13
சீட்டிழுப்பு இலக்கம் 247
வெற்றி இலக்கங்கள்: துலாம் 04 22 30 61 துலாம்

### மஹஜன சம்பத

திகதி 2022/11/13
சீட்டிழுப்பு இலக்கம் 4938
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 9 8 4 3 6 6

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1913
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.11.13
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: D 14 31 43 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,161,160/-

### சனிதா

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.13
சீட்டிழுப்பு இல : 4074
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,832,020/-
வெற்றி இலக்கங்கள்: 14 34 49 58
ஆங்கில எழுத்து: Z

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 248
சீட்டிழுப்பு திகதி 2022.11.13
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 02 45 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,910,980/-

### ராசி

திகதி 2022-11-13
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,776,284.40
வெற்றி வாரம் 3625
வெற்றி இலக்கங்கள்: 04 07 31 47
மேஷம்
வர்ணம் ஊதா
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 6,985,240/-

### 27

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 35 02 07 32 47
சீட்டிழுப்பு வாரம் 1089
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.11.13 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 276,984,035.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

### அத கோடிபதி

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1739
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.13
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,242,840/-
வெற்றி இலக்கங்கள்: 07 60 66 67
ஆங்கில எழுத்து: P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவிகள் மத்தியில் அதிகரிக்கும் போதைப் பாவனை

வடமேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் பெருமளவிலான மாணவிகள் தற்போது ஐஸ் உள்ளிட்ட பல்வேறு போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

பல பிரதான பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவிகள் அதிகளவானோர் போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளதாக தகவல் கிடைத்துள்ளதுடன், எட்டாம் வருடத்தில் இருந்து உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவிகளே இவ்வாறு போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தின் பிரதான நகரங்களில் அமைந்துள்ள பிரதான பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவிகள் இவ்வாறு போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்கள் தமது காதலர்கள் மற்றும் போதைப் பொருள் வியாபாரிகள் ஊடாக போதைப்பொருளை பெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில காலங்களுக்கு முன்னர் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றதுலே எனும் போதைப்பொருள் தற்போது மாணவிகள் மத்தியில் பரவலாக காணப்படுவதாகவும், பாடசாலை நேரங்களில் கழிவறைக்கு செல்லும் போது இதனை அடிக்கடி பயன்படுத்துவதாகவும் தெரிய வந்துள்ளது.

மேலும், வார இறுதி நாட்களில் முக்கிய நகரங்களில் நடத்தப்படும் தனியார் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்கிறேன் என்ற போர்வையில் மாணவிகள் தங்கள் ஆண் நண்பர்கள் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து இந்த போதைப்பொருளை குடிக்க ஆசைப்படுவதும் தெரிய வந்துள்ளது.

இது மிகவும் பாரதூரமான பிரச்சினை எனவும், இதனைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத குருநாகல் பாடசாலையின் அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் நாட்டின் ஒட்டு மொத்த பாடசாலை முறையும், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் இளைஞர்களும் போதைக்கு அடிமையாவதை தடுக்க முடியாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பான விசாரணையில் ஈடுபட்டுள்ள வடமேல் மாகாணகல்வி அமைச்சின் செயலாளர் திருமதி ராஜித ரத்நாயக்க, இது மிகவும் பாரதூரமான நிலை என்பதால் இது தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த திணைக்களங்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

ஹலவத்தை பிரதேசத்தில் இவ்வாறான நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு அப்பிரதேச பாடசாலைகள் கடுமையான நடைமுறைகளை பின்பற்றுமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் செயலாளர் குறிப்பிட்டார். (4-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13401)

076 825 7716 (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (13430)

தொடர்பு: றாஜ் - 077 679 6623


# உலகக் கிண்ண தொடர் இங்கிலாந்து சம்பியன்



ஆடவர் உலகக்கிண்ண இருபதுக்கு இருபது தொடரின் இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் அணியை 5 விக்கெட்களால் வீழ்த்தி இங்கிலாந்து அணி மகுடம் சூடியுள்ளது.

மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 137 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அவ்வணி சார்பாக ஷான் மசூத் 38 ஓட்டங்களையும் அணித் தலைவர் பாபர் அசாம் 32 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுக்க பந்து வீச்சில் சாம் கரன் 3 விக்கெட்களை சாய்த்தார்.

இதனை தொடர்ந்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இதன் காரணமாக ஆடவர் உலகக்கிண்ண இருபதுக்கு இருபது தொடரை வென்று இங்கிலாந்து அணி சம்பியன்பட்டம் வென்றுள்ளது. (4-7)


வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 1 பரப்பு 15 குளியில் அமைந்த வடக்கு வாசல் புதிய வீடு உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு (13448)

076 702 3565



A/L 2022 தமிழ்
கருத்தரங்கு

பா.பத்மநாதன்
B.A(hons) [tamil spl] - 1st class, M.A(tamil) - 1st class, M.ED(Hons) - 1 st class, Dip in Ed

கருத்தரங்கு நடைபெறும் கல்வி நிறுவனங்கள் 8 நாட்கள் நடைபெறும்

C.C.A சுன்னாகம் 15.11.2022 3.30 pm
மொடேண் சண்டிலிப்பாய் 18.11.2022 3.30 pm
மதுடம் உரும்பிராய் 16.11.2022 3.30 pm

வெளி மாணவர்களுக்கும் அனுமதியுண்டு. (13442)


# மரண அறிவித்தல்



## உலகநாதன் பீஷ்மா

(முன்னாள் ஊழியர் - வலம்புரி)

தோற்றம் 17.03.1967 — மறைவு 13.11.2022

யாழ்ப்பாணம் குருநாதசுவாமி கோவிலடியைச் சேர்ந்த உலகநாதன் பீஷ்மா அவர்கள் நேற்று (13.11.2022) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உலகநாதன் - நவமணி தம்பதியரின் ஏக புதல்வனும் நாரந்தனை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பிஸ்கால் கந்தப்பு - விசாலாட்சி தம்பதியரின் மருமகனும் தவராணியின் அன்புக் கணவரும் அனுஷா (கனடா), அம்பிக்காவின் (கனடா) அருமைச் சகோதரனும் காலஞ்சென்ற சதீஸ்வரன் மற்றும் ஜக்சன் ஜீவா (கனடா), கந்தசாமி - ஸ்ரீதேவி, கிருஷ்ணபிள்ளை - நிலாம்பிகை, நேசராசா - தனலட்சுமி, பேரின்பநாதன் - அன்னலட்சுமி, பரமநாதன் - செந்தமிழ்செல்வி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (14.11.2022) திங்கட்கிழமை பகல் 10 மணியளவில் நடைபெற்று பின்னர் கோம்பயன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

186/11, குருநாதசுவாமி
கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (C-5258)

தகவல்:
திருமதி தவராணி பீஷ்மா
077 3789994


அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான
றோயல் நெய்

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை
தரமான றோயல் நெய் கொண்டு
தயாரித்த அறுசுவை உணவுகளுடன்
கொண்டாடி மகிழுங்கள்.



Packed By:-
Royal Industries®
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567

குறிப்பு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (C-5250)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.